# பொதுக்காலம் 28ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அழைக்கப்பட்டோர் பலரில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிலரே என்று நம்மை இப்பலியில் பங்கேற்க தேர்ந்தெடுத்த இறைவனுக்கு நன்றி நவில இன்றைய பொதுக்காலம் 28ஆம் ஞாயிறு திருப்பலிக்கு அன்போடு அழைக்கிறோம்.

“நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்; அரச குருத்துவ திருக்கூட்டம்” என்று நம்மை அழைத்து உயர்ந்த இடத்தில் அமர்த்தியிருக்கிறார் இறைவன். அழைக்கப்பட்டவரின் அன்புக்கு தகுதி பெற்றிட நம் வாழ்வில் அவரின் நெறிகளை முன்னிறுத்துவோம். இறைவனை மகிழச் செய்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், தாம் அன்பு கொண்ட மக்களுக்கு இறைவன் அளிக்கும் மாபெரும் விருந்தை எடுத்துரைக்கிறார் எசாயா இறைவாக்கினர்.

இவ்வுலக வாழ்வில்

உறவுகள் அளிக்கும் விருந்து நாவிற்கு இனிமையூட்டி

உடலை மகிழச் செய்யும்.

உன்னதர் அளிக்கும் விருந்து மனதிற்கு மகிழ்வூட்டி

எண்ணங்களை உயரச் செய்யும்.

ஒவ்வொரு முறை திருப்பலியில் பங்கேற்கும் போதெல்லாம் இறைவிருந்தை அனுபவித்து மகிழ்வோம்.

இன்றைய நற்செய்தியில், “அழைப்புப் பெற்றவர்களோ பலர், தேர்ந்தெடுக்கப்பட்டவரோ சிலர்” என்ற உண்மையை உவமை வாயிலாக எடுத்துரைக்கிறார் இயேசு. இவ்வுலகில் பிறப்பெடுக்கும் அனைவருமே வாழ்க்கை எனும் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள்தான். இறைப்பாதையை அறிந்து அதிலே பயணிக்கிறவர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைய திருப்பலி விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று விசுவாசம் கொள்வோம். இப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிலரே என்றுரைத்தவரே எம் இறைவா!

திரு அவையை வழிநடத்த நீர் தேர்ந்துகொண்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இறைவழியில் நடந்து, இறைத் திருவுளம் அறிந்து பணியாற்றவும், எளிய வாழ்வில் இயேசுவைப் பிரதிபலிக்கும் உண்மை சாட்சிகளாய் வாழ்ந்து நற்செய்தியை வாழ்வாக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அரசுரிமையை வழங்குபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், இறைபயத்தோடு ஆட்சி செய்யவும், உண்மையோடும் நேர்மையோடும் ஆட்சி செய்து மக்களை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தவும், அதிகாரப் போக்கினைக் கைவிட்டு, இயற்கையோடு இணைந்து நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு நடத்திச் செல்ல நல்லறிவு தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. “வளமையிலும் வாழத் தெரியும், வறுமையிலும் வாழத் தெரியும்” என்று உணர்த்தியவரே எம் இறைவா!

எம் பகுதியில் வளமையில் வாழும் மக்கள், அன்றாட தேவைகளை நிறைவேற்றவே போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வரவும், நோயில் வாடுவோர், ஆதரவற்றோர் போன்றவர்களோடு நேரத்தையும் அன்பையும் பகிர்ந்து கொள்ள வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்பவரே எம் இறைவா!

எம் பகுதியில் பருவ மழை பொழியவும், வேளாண்மை சிறக்கவும், நோய்த் தொற்று குறைந்து, மக்களின் இயல்பு வாழ்வு திரும்பவும், குடும்ப அமைதி, பொருளாதாரம் சிறக்கவும், உள்ளத்தின் தேவைகள் இறையருளால் நிறைவேற்றப்படவும், மனமகிழ்வோடு சமூகம் விளங்க ஆசி பொழிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com